## இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம் - 2017

இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தின் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(6) ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் கருத்துரைகள் மீளாய்வாண்டின் நிறுவகத்தின் செயற்படுநிலை தொடர்பான எனது அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் நிதிக்கூற்றுக்கள் 2018 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரையிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2 சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் இருப்பு

நிறுவகத்தினால் இறுதியாகத் தயாரிக்கப்பட்ட 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினங்கள் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| நிதிக்கூற்றுக்களின் விடயங்கள் | பெறுமதி |
|---|---|
| | ரூபா |
| சொத்துக்கள் | |
| நடைமுறையல்லாச் சொத்துக்கள் | 619,925,910 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 402,380,412 |
| மொத்த சொத்துக்கள் | 1,022,306,322 |

| பொறுப்புக்கள் | |
| --- | --- |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 105,623,092 |
| தேறிய சொத்துக்கள் / உரித்துக்கள் | 916,683,230 |
| மொத்த பொறுப்புக்கள் | 1,022,306,322 |
| மொத்த வருமானம் | 441,675,374 |
| மொத்தச் செலவினம் | (331,289,989) |
| மிகை | 110,385,385 |

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கீழே குறிப்பிடப்படுகின்ற இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலாத்துறை அலுவல்கள் அதிகாரச்சட்டத்தின் 39(2), (3) ஆம் உபபிரிவுகள் | கலாசார அலுவல்கள் சபையொன்று நியமிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1999 இன் சுற்றுலா ஹோட்டல் உறுப்புரைக் கோவையின் 02 ஆம் இலக்க பிரிவு | சுற்றுலா ஹோட்டலொன்றை நடாத்திச் செல்லும் போது வியாபாரங்களைப் பதிவுசெய்து அதற்காக அனுமதிப்பத்திரம் பெறப்பட வேண்டியிருந்த போதிலும், நிறுவகத்தால் நிர்வகிக்கப்படுகின்ற சமுத்திரா ஹோட்டலுக்கான பதிவு மற்றும் அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2008 சனவரி 01 ஆந் திகதிய 1530/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் திருத்தப்பட்ட 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரை வரி அதிகாரச்சட்டத்தின் 03 ஆம் பிரிவு | கொடுப்பனவு செய்யும் போது ரூபா 25,000 இற்கு மேற்பட்ட ஒவ்வொரு கொடுப்பனவுகளிலும் ரூபா 25 முத்திரை வரி அரசாங்கத்திற்காக அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், நிறுவகம் அவ்வாறு நடவடிக்கை எடுக்காதிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. |
| (ஈ) 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நிலையான சொத்துப் பதிவேடு பேணிச் செல்லப்பட வேண்டியிருந்த போதிலும் அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | கணனி, வன்பொருள் மற்றும் மென்பொருளுக்காக பதிவேடொன்று பேணப்பட வேண்டியிருந்த போதிலும், அதற்கு இணங்க நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஊ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 4.2.5 ஆம் பிரிவு | தொழிற்படு மூலதனத்தை வினைத்திறனாக முகாமைத்துவம் செய்யும் வகையில் கடன்பட்டோர் கடன்கொடுத்தோர் காலப்பகுப்பாய்வு, இருப்பு காலப்பகுப்பாய்வு, காலாவதியான மற்றும் மெதுவாக அசைகின்ற இருப்புக்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பான கூற்றுக்கள் பணிப்பாளர் சபையினால் மாதாந்தம் மீளாய்வு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (எ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) | நிதிப்பிரமாணம் 104(3) மற்றும் 104(4) | 2017 ஆம் ஆண்டில் ஏற்பட்ட 02 வாகன விபத்துக்கள் தொடர்பாக 07 நாட்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆரம்ப பரிசோதனை அறிக்கை அல்லது 03 மாதங்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய இறுதிப் பரிசோதனை அறிக்கை என்பன கணக்காய்வுச் சந்தர்ப்பமான 2018 யூலை 31 ஆந் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 371(2)(ஆ) | கணக்கீட்டு உத்தியோகத்தரினால் உப கட்டுநிதியொன்று எந்தவொரு விசேட பணிகளுக்காகவும், ஒரு சந்தர்ப்பத்தின் போது ரூபா 100,000 ஆகக் கூடியது வரை மாத்திரம் செலுத்த முடியும் எனக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கு முரணாக முற்பணமாக ஒரு சந்தர்ப்பத்தின் போது ரூபா 150,000 தொகை வழங்கப்பட்டிருந்தது. செயல்நிமித்த உபகட்டு நிதி பதவிநிலைத் தரத்தின் உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் வழங்கப்பட முடியுமாக இருந்த போதிலும், நிறுவனத்தில் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்ட உத்தியோகத்தருக்கு 02 சந்தர்ப்பங்களின் போது கூட்டுமொத்தமாக ரூபா 17,500 தொகையான முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. |
| (iii) | நிதிப்பிரமாணம் 371(5) | செயல்நிமித்த உபகட்டுநிதி உரிய விசேட பணிக்கு அண்மித்த திகதியில் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட வேண்டியிருந்ததுடன் உத்தியோகத்தரால் அந்தப் பணி முடிவடைந்து 10 நாட்களுக்குள் மீண்டும் கட்டுநிதி தீர்க்கப்பட வேண்டும். எனினும், 13 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 4,000 முதல் ரூபா 90,000 வரையிலான செயல்நிமித்த உப கட்டுநிதியைத் தீர்ப்பதற்காக 26 நாட்கள் முதல் 302 நாட்கள் வரையிலான கால வீச்சினை எடுத்திருந்தது. |

| | | |
|---|---|---|
| | | அவ்வாறு முற்பணம் செலுத்தும் போது அந்த முற்பணத் தொகை பெறப்பட்ட நிதியாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் அதிக தாமதமின்றி மீண்டும் தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும், 02 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 35,000 கூட்டுத்தொகையான முற்பணம் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | நிதிப்பிரமாணம் 756 | மீளாய்வாண்டிற்காக பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்படடிருந்த போதிலும், அதற்குரிய அறிக்கை கணக்காய்வுச் சந்தர்ப்பமான 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (v) | நிதிப்பிரமாணம் 1642 | வாகனங்களைப் பயன்படுத்துகின்ற உத்தியோகதர்களினால் அல்லது அவர்கள் இல்லாத சந்தர்ப்பத்தின் போது அந்த வாகனத்திற்கு பொறுப்பாகவுள்ள சாரதியினால் ஏற்படுகின்ற சகல எதிர்பாராத விபத்துக்களும் அண்மையிலுள்ள பொலிஸிற்கு அறிவிக்கப்பட்டு பொலிஸ் அறிக்கையொன்று பெறப்பட வேண்டியிருந்த போதிலும், 2017 யூன் 06 ஆந் திகதி வாகனத்திற்கு ஏற்பட்ட திடீர் விபத்து தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (vi) | நிதிப்பிரமாணம் 1646 | வாகனப் பொறுப்பு உத்தியோகத்தரினால் அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன் 268(அ) ஆம் படிவத்தில் எழுதப்பட்ட பிரயாணம் தொடர்பான மாதாந்த பொழிப்பின் மூலப்பிரதியுடன் அந்தந்த மாதத்தின் நாளாந்த ஓட்டக்குறிப்புக்கள் கண்ககாய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், நிறுவகத்தின் 05 வாகனங்களுக்கு அந்த ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (vii) | நிதிப்பிரமாணம் 1647(உ) | வாகனப் பொறுப்பு உத்தியோகத்தரினால் தமது பொறுப்பில் உள்ள டோட்டார் வாகனவகை, வடிவம், பதிவு இலக்கம் தொடர்பான தகவல்களை உள்ளடக்கி மோட்டார் வாகன பட்டியலொன்று பேணப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை |

### 2.4 போதியளவான அதிகார பலத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

---

2014 மே 06 ஆந் திகதிய 2014/55/09 ஆம் இலக்க பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் பிரகாரம் வெளிவாரி விரிவுரையாளர்களுக்கு அவர்களின் தகைமைகள் மற்றும் அனுபவங்களின் அடிப்படையில் மணித்தியாலமொன்றிற்கு செலுத்தப்பட்ட படிகள் பணிப்பாளர் சபையின் அங்கீகாரமின்றி திருத்தம் செய்யப்பட்டிருந்ததுடன் 2017 சனவரி முதல் யூன் மாதம் வரை திருத்தப்பட்ட கட்டணத்தின் பிரகாரம் வெளிவாரி விரிவுரையாளர் படியாக ரூபா 662,750 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

#### 3.1.1 திட்டமிடல்

நிறுவகத்தின் 2016 - 2018 இன் கூட்டிணைந்த திட்டம், 2017 இன் செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் 2017 இன் செயலாற்றல் அறிக்கை தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிறுவகத்தின் 2017 இன் செயல்நடவடிக்கைத் திட்டத்திற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிறுவகத்தின் 2017 இன் செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்கும் வகையில் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதனால் நிறுவகத்தின் செயலாற்றல் மதிப்பீடு ஆக்கபூர்வமான மூலமாக செயல்நடவடிக்கைத் திட்டம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) 2016-2018 ஆம் ஆண்டிற்கான கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், நிறுவகத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக காணப்படுகின்ற சக்தி, நலிவுகள், சந்தர்ப்பங்கள் மற்றும் ஆபத்துக்கள் என்பவற்றை சரியாக மதிப்பீட்டிற்குஉட்படுத்தி திட்ட நடவடிக்கைகள் இடம்பெற்றிருக்கவில்லை.

(ஈ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய மனிதவள அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சமுத்திரா ஹோட்டலின் விழா மண்டபத்தை ஒதுக்கீடு செய்ததன் பின்னர் இரத்துச் செய்யும் போது நிறுவகத்திற்கு ஏற்படுகின்ற நட்டங்கள் தொடர்பாக முற்பணத் தொகையில் நிறுத்தி வைக்கப்பட வேண்டிய சதவீதம் தொடர்பாக ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சமுத்திரா பயிற்சி ஹோட்டல் அறை இலக்கம் 202 இல், 2016 மே 25 ஆந் திகதி முதல் 2017 ஆகஸ்ட் 17 ஆந் திகதி வரை வெளித்தரப்பினரால் தங்குமிடங்களைப் பெற்றிருந்ததுடன் தங்குமிட கட்டணமாக அறவிட வேண்டிய ரூபா 4,050,000 தொகை கணக்காய்வுச் சந்தர்ப்பமான 2018 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. தங்குமிட வசதிகளை வழங்கும்போது முகாமையினால் எந்தவொரு முற்பணமோ அல்லது எழுத்து மூல உடன்படிக்கையோ கைச்சாத்திடாமல் வழங்கப்பட்டிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

(இ) நிறுவகத்தின் மூலம் நடாத்தப்பட்ட பாடநெறிகளுக்காக அறவிடப்படுகின்ற கட்டணம் 2006 ஏப்ரல் மாதத்தின் பின்னர் திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) எதிர்பார்க்கப்பட்ட செலவினம் மிகவும் சரியாக மதிப்பீடு செய்யப்படாமையின் காரணமாக தேவையான அளவை விட 45 சதவீதம் முதல் 90 சதவீதம் வரை மிகைப் பண அளவொன்று முற்பணமாக வழங்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் பணிகள் நிறைவு பெற்றதும் உடனடியாக எஞ்சிய பணம் தீர்க்கப்படாமல் 26 நாட்கள் முதல் 213 நாட்கள் வரை மிகைப் பணம் முற்பணம் பெற்ற உத்தியோகத்தரின் கையில் வைத்திருந்ததன் அடிப்படையில் அரசாங்கத்தின் பணம் முறையற்ற வகையில் பயன்படுத்தப்படுவதை தடுப்பது தொடர்பாக முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(உ) நிறுவகத்தினால் எதிர்கால ஓய்வூதிய நலன் பொறுப்புக்களைத் தீர்க்கும் நோக்கில் 2013 ஒக்தோபர் 30 ஆந் திகதி சாதாரண சேமிப்புக் கணக்கில் ரூபா 11,910,882 தொகை முதலீடு செய்யப்பட்டு மீளாய்வாண்டு இறுதிவரையும் பேணிச் செல்லப்பட்டிருந்தது. அந்த பணத்தை மிகவும் ஆக்கபூர்வமான நலன்களைப் பெறக்கூடிய வகையில் நிலையான வைப்பொன்றில் முதலீடு செய்து பெறக்கூடியதாக இருந்த வட்டி வருமானத்தை நிறுவகம் இழந்திருந்தது.

(ஊ) 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டத்தின் 10, 16 மற்றும் 47 ஆம் பிரிவுகளுக்கு முரணாக ஊழியர்களினதும் சேவை பெறுநர்களினதும் பங்களிப்பைச் செலுத்தும் போது சீராக்கப்பட வேண்டிய படிகள் தவிர அடிப்படைச் சம்பளம் மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு செலுத்தப்பட்டமையினால் 2008 ஆகஸ்ட் மாதம் முதல் 2014 திசெம்பர் வரையான கால எல்லைக்காக ஊழியர்களின் பங்களிப்பாக ரூபா 35,210 தொகையும், அதற்குரிய மிகைக் கட்டணமாக ரூபா 44,013 தொகையுமாக கூட்டுமொத்தமாக ரூபா 79,223 மேலதிகமாக நிறுவகத்திற்கு செலவிட வேண்டி ஏற்பட்டிருந்தது.

### 3.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

சமுத்திரா ஹோட்டலின் ஆண்டின் போது வருமானம் பெற்றுக் கொள்வதற்காக 3650 ஹோட்டல் அறை இரவுகள் காணப்பட்டதுடன் அதில் நிறுவகத்திற்கு மீளாய்வாண்டின் போது 845 ஹோட்டல் அறை இரவுகளை அதாவது 23 சதவீதத்தை மாத்திரம் வழங்கக் கூடியதாக இருந்தது. மேலும், கடந்த சில ஆண்டுகளின் போது அறைகளின் பயன்படுத்தல் போதியளவில் அதிகரித்திருக்காமை அவதானிக்கப்பட்டதுடன் 2014 ஆம் ஆண்டில் அடையப்பட்ட 1442 ஹோட்டல் அறை இரவுகளுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டு வரையில் 845 ஹோட்டல் அறை இரவுகள் வரை 41 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

### 3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும்அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அமைச்சில் அமைச்சு அலுவலகம் ஒன்று இருக்கும் போது மற்றும் அமைச்சரின் அலுவலகச் செலவினங்களுக்காக அமைச்சு செலவினத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கும் போது, 2016 ஆம் ஆண்டு முதல் உடன்படிக்கையில் கைச்சாத்திடாமல் இந்த நிறுவகத்தின் 7ஆவது மாடி வரிசை அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அமைச்சின் மின்சாரம் மற்றும் நீருக்கான செலவினங்களும் நிறுவகத்தினால் செலவிடப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக இது தாபிக்கப்பட்டுள்ள அமைச்சரின் அலுவலகத்தை அபிவிருத்தி செய்தல் மற்றும் பராமரிப்புச் செயற்பாடுகளுக்காக மீளாய்வாண்டின் போது நிறுவகத்தால் ரூபா 2,449,004 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) சிரேஷ்ட விரிவுரையாளர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள கடமை விபரங்களின் பிரகாரம் வினாப்பத்திரங்களைத் தயாரித்தல், விடைத்தாள்களை மதிப்பிடுதல் மற்றும் மாணவர்களின் செயலாற்றலை மதிப்பிடுதல் என்பன அவர்களினால் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், சம்பளத்திற்கு மேலதிகமாக மேற்கூறப்பட்ட கடமைகளை நிறைவேற்றுவதற்காக சிரேஷ்ட விரிவுரையாளர்களுக்கு மேலதிக படியொன்று செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறு 2017 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட தொகை ரூபா 183,390 ஆகும்.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பெறுகை மற்றும் ஒப்பந்த நடைமுறைகள்

#### 4.1.1 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 சனவரி 25 ஆந் திகதிய தேசிய பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1(ஆ) பந்தியின் பிரகாரம் நிறுவகத்திற்காக மூன்று வருட பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்படாமை, 2017 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட பிரதான பெறுகைகள் திட்டத்திற்கு பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெறப்படாமை மற்றும் சகல பெறுகைகளினதும் ஆரம்பத் திகதி 2017 சனவரி 01 ஆக இடப்பட்டிருந்தமை போன்ற காரணங்களினால் பெறுகைத் திட்டம் முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) நிறுவகத்தால் நடாத்தப்படுகின்ற ஹோட்டல் பாடசாலையின் மாணவர்களின் செயன்முறைப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்திற்காகவும், சமுத்திரா ஹோட்டலில் தங்குமிடங்களைப் பெறுகின்ற பிரயாணிகளுக்காகவும் உபசரிப்பு நடவடிக்கைகளுக்காக மரக்கறி, பழவகை, இறைச்சி, மீன் மற்றும் உலர் உணவுப் பொருட்களை வழங்குவதற்காக 2014 ஆம் ஆண்டின் பின்னர் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளாமல் 2014 ஆம் ஆண்டின் போது தெரிவு செய்யப்பட்ட வழங்குனர்களுக்கே மீளாய்வாண்டு வரையிலும் வழங்கல்களைப் பெறுதல் இடம்பெற்றிருந்தது. அவ்வாறு மீளாய்வாண்டில் பெறப்பட்ட வழங்கல்களின் பெறுமதி ரூபா 7,296,505 ஆகும்.

(இ) 2017 ஆம் ஆண்டின் போது இடம்பெற்ற பெறுகை நடவடிக்கைகள் 2017 திசெம்பர் 26 ஆந் திகதி முடிவுறுத்தப்பட்டு பெறுகைகள் கையளித்தல் கடிதம் விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியான 2018 யூலை 31 ஆந் திகதி மற்றும் நிறுவகம் இது தொடர்பாக எழுத்து மூல உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருக்கவில்லை. மேற்கூறப்பட்ட காலப்பகுதியில் உடன்படிக்கையில் கைச்சாத்திடாமல் ஹோட்டல் பாடசாலை மாணவர்களின் செயன்முறைப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் சமுத்திரா ஹோட்டலில் தங்குமிட வசதிகளைப் பெற்ற பிரயாணிகளின் உபசரிப்பு நடவடிக்கைகளுக்குத் தேவையான மரக்கறி, பழவகை, இறைச்சி, மீன் மற்றும் உலர் உணவுப் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்ட மொத்தத் தொகை ரூபா 15,154,700 ஆகும்.

(ஈ) 2017 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பெறுகை நடவடிக்கைகள் தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் காணப்பட்டன.

(i) பெறுகைகளின் போது மதிப்பீட்டிற்குப் பயன்படுத்தப்படுகின்ற கருதுகோள்கள் காண்பிக்கப்படாதிருந்ததுடன் எந்தவொரு வழங்குனரும் கேள்விப்பிணை சமர்ப்பிக்காமை.

(ii) கூறுவிலைகள் திறக்கும் போது முத்திரையிடப்பட்ட கடித உறையிலும், சமர்ப்பிக்கப்பட்ட கேள்வி ஆவணங்களிலும் திறக்கப்பட்ட திகதியில் திகதி முத்திரையிடப்பட்டு மூன்று அங்கத்தவர்களும் கையொப்பமிடாமை.

(iii) கூறுவிலை திறக்கும் சந்தர்ப்பத்தில் கூறுவிலை கோருவதற்காக சமர்ப்பித்த கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதி பங்குபற்றியமைக்கான சான்றுகள் இன்மை.

**4.2 ஆண்டறிக்கையை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல்**

நிறுவகத்தினால் 2012 ஆம் ஆண்டிற்குரிய ஆண்டறிக்கை 2014 செப்தெம்பர் 09 ஆந் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அதன்பின்னர் ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப் பாட்டுத் துறைகள் | அவதானிப்புகள் |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் | நிலையான சொத்துப் பதிவேடொன்று பராமரிக்கப்படாமை. |
| (ஆ) | பெறுகை நடைமுறைகள் | ஹோட்டல் பாடசாலை மாணவர்களின் செயன்முறைப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் சமுத்திரா ஹோட்டலில் தங்குமிடங்களைப் பெற்ற பிரயாணிகளின் உபசரிப்பு நடவடிக்கைகளுக்குத் தேவையான மரக்கறி, பழவகை, இறைச்சி, மீன் மற்றும் உலர் உணவுகளை வழங்குவதற்கான பெறுகை முறையான பிரகாரம் மேற்கொள்ளப்படாமை. |
| (இ) | வாகன நிர்வாகம் | சில வாகனங்களின் சட்டரீதியான உரித்தை நிறுவகத்தின் பெயரில் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (ஈ) | வெளிவாரி விரிவுரையாளர்களுக்கான படி | வெளிவாரி விரிவுரையாளர்களின் படிகள் பணிப்பாளர் சபையின் அங்கீகாரமின்றி திருத்தப்பட்டிருந்தமை |
| (உ) | பொருட் பதிவேட்டுக் கட்டுப்பாடு | (i) ஒவ்வொரு பிரிவிற்கான பொருட் பதிவேடு பேணப்படாதிருந்ததுடன் பொருள் மெய்மையாய்வு அறிக்கையும் தயாரிக்கப்படாமை.<br>(ii) பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத சொத்துக்கள் தொடர்பாக முறையான திட்டமுறைமையொன்று தயாரிக்கப்படாமை |
| (ஊ) | பதிவேடுகளைப் பேணல் | முற்பணப் பதிவேடு நாளதுவரையாகப் பேணப்படாமை |
| (எ) | பதவியணியினர் நிர்வாகம் | (i) மனித வளத் திட்டமொன்று தயாரிக்கப்படாமை<br>(ii) முறையான இடமாற்ற நடைமுறையொன்று காணப்படாமை. |

| | | |
|---|---|---|
| | | (iii) வருடாந்த செயலாற்றல் மதிப்பீட்டிற்காக தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் காணப்பட்டாமை |
| | | (iv) மனித வள தகவல் முறையொன்று பேணப்பட்டிராமை. |
| (ஏ) | திட்டமிடல் | நிறுவகத்தால் 2017 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்ட பாடநெறிகளுக்காக இலக்கிடப்பட்ட மாணவர் எண்ணிக்கை தொடர்பாக பதிவாளரினால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட எண்ணிக்கைக்கும் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட எண்ணிக்கைக்குமிடையே வேறுபாடுகள் காணப்பட்டமை. |